
கர்த்தருக்கு ஸ்தோத்திரம் !

# மனுஷருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவது பாவம்

சாது. C, செல்வ ராஜ் (ஐயா)



கிறிஸ்துவின் பரிசுத்த சாட்சி

**ஆத்மீக அப்பா**

**சாது. C. செல்வ ராஜ் (ஐயா) அவர்கள்**

# மனுஷருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவது பாவம்

கர்த்தருக்குள் பிரியமானவர்களே,

மனுஷருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவது பாவம்; அப்படி மனுஷருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினதாக கர்த்தருடைய பரிசுத்த வேதாகமத்தில் எந்த ஆதாரமும் இல்லை.

**ஸ்தோத்திரம் என்பது தேவனுக்குச் செலுத்த வேண்டிய ஒரு பலி :**

ஸ்தோத்திரம் என்பது, மகா மகிமையான தேவனுக்குச் செலுத்த வேண்டிய மகா மகிமையான ஒரு பலியாகும். ''ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப் படுத்துகிறான்''. (சங்கீதம் 50 : 23)

தேவனுக்குச் செலுத்தவேண்டிய பலியை மனுஷருக்குச் செலுத்துவது மகா பாவமாகும்.

மேலும், தேவனுக்குச் செலுத்த வேண்டிய பலியை மனுஷனுக்குச் செலுத்துவது, மனுஷனையே தேவனுக்குச் சமமாக்கும் மகா பயங்கரமான ஒரு பாவச் செயலாகும். தேவனாகிய கர்த்தர் தமது மகிமையையோ தமது துதியையோ, வேறு யாருக்கும் எதற்கும் கொடுக்கிறவர் அல்ல. "என் மகிமையை நான் வேறொருவருக்குங் கொடேன்" (ஏசாயா 48 : 11). " நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்". (ஏசாயா 42 : 8)

**ஸ்தோத்திரம் என்பது உதடுகளின் காளை :**

ஸ்தோத்திரம் என்பது உதடுகளின் காளையாகும். (ஓசியா 14 : 2). காளை ஒரு பலி மிருகமாக பழைய ஏற்பாட்டின் காலத்தில் காணப்பட்டது. ஸ்தோத்திரம் என்பது உதடுகளால் அல்லது வாயால் தேவனுக்குச் செலுத்தப்படும் ஒரு மகிமையான பலி

மிருகமான பழுதற்ற காளையாகும். தேவனுக்கு உதடுகளால் செலுத்த வேண்டிய பலி மிருகமான பழுதற்ற உதடுகளின் காளைகளை, மனுஷரைப்பார்த்து உதடுகளால் அதாவது வாயால் மனுஷருக்குச் செலுத்துவது எவ்வளவு கொடிதான பாவம் என்பதை யாவரும் உணர்ந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

**ஸ்தோத்திரம் என்பது உதடுகளின் கனி :**

ஸ்தோத்திரம் என்பது உதடுகளின் கனியாகிய ஒரு விசேஷமான பலியாகும். (எபிரெயர் 13:15) கனி என்றால் பழமாகும். ஸ்தோத்திரம் என்பது உதடுகளால் அல்லது வாயால் தேவனுக்குச் செலுத்தும் மகா விசேஷமான கனியாகிய அல்லது பழமாகிய பலியாகும். இப்படிப்பட்ட தேவனுக்குச் செலுத்த வேண்டிய பலியை மனுஷருக்குச் செலுத்துவது எவ்வளவு பெரிய பாவம் ?

**ஸ்தோத்திரம் என்பது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டு:**

மேலும், ஸ்தோத்திரம் என்பது வாயினால் தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டாகும். புதுச்சிருஷ்டியின் அநுபவத்தை அடைந்த இரட்சிக்கப்பட்ட புது மனுஷர்கள் தங்களது புது வாயினால் புதுப்பாட்டாகிய ஸ்தோத்திரமாகிய பாட்டைப் பாடுகிறார்கள். (சங்கீதம் 40 : 1-3; 2 கொரிந்தியர் 5 : 17).

**ஸ்தோத்திரம் என்பது தேவனுக்கு நன்றி செலுத்தும் பலி :**

வாயினால் மட்டுமல்ல, ஆத்துமாவினாலும் முழு உள்ளத்தினாலும் கர்த்தரை ஸ்தோத்திரிக்க வேண்டும்; மனுஷரை ஸ்தோத்திரிக்கக் கூடாது. "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" (சங்கீதம் 103 : 1, 2) "தேவன் அருளிய

சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்'' (2 கொரிந்தியர் 9 : 15). ஸ்தோத்திரம் என்பது தேவனுக்கு வாயினால் நன்றி செலுத்தும் ஓர் மகிமையான பலியாகும். எனவே தேவன் தங்களுக்குச் செய்கிற சகல நன்மைகளுக்காகவும், உபகாரங்களுக்காகவும், ஈவுகள் தானங்களுக் காகவும், எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் எல்லாவற்றிலேயும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து அதாவது தேவனுக்கு ஸ்தோத்திர பலியைச் செலுத்தி கர்த்தரை மகிமைப்படுத்து கிறவர்களாய் யாவரும் காணப்படவேண்டும். இப்படிச் செய்வதே தேவனுடைய சித்தமாகவும் இருக்கிறது. (எபேசியர் 5:20; 1தெசலோனிக் கேயர் 5:18).

**தேவனுக்குச் செலுத்த வேண்டிய பலியை மனுஷருக்குச் செலுத்துவது பாவம் :**

தேவனுக்குச் செலுத்த வேண்டிய இந்த மகா மகிமையான ஸ்தோத்திர பலியை மனுஷருக்குச் செலுத்துவது, தேவனுக்குரிய

துதியாகிய பலியை மனுஷருக்குச் செலுத்துவதாகும். தேவனுக்குரிய துதியாகிய பலியை மனுஷன் விரும்புவதும், அதை ஏற்றுக் கொள்வதும் மகா பயங்கரமான பாவம் மட்டுமல்ல சாபமுமாகும். தேவனுக்குரிய துதியை தேவதூதனாய்க் காணப்பட்ட சாத்தான் விரும்பினான்; எனவே அவன் சபிக்கப்பட்டவனாகவும், பிசாசாகவும் மாறினான்; மட்டுமல்ல அவனைச் சேர்ந்தவர்களும் சபிக்கப்பட்டவர்களாகவும், பிசாசுகளாகவும் மாறினார்கள். எனவே மனுஷரைப் பார்த்து ஸ்தோத்திரம் செலுத்துவது அல்லது சொல்லுவது அல்லது மனுஷருக்கு ஸ்தோத்திரம் சொல்லி கடிதம் முதலியவை எழுதுவது மகா பாவத்துக் குரியது மட்டுமல்ல மகா சாபத்துக்குரியதுமாகும்.

**மனுஷரைப் பார்த்து ஸ்தோத்திரம் சொன்னதாக வேதத்தில் எந்த ஆதாரமும் இல்லை :**

கர்த்தருடைய பரிசுத்த வேதாகமத்தில், மனுஷரைப் பார்த்து ஸ்தோத்திரம்

சொன்னதாக எந்த ஒரு ஆதாரமுமே இல்லை. விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமும் மனுஷரைப் பார்த்து வந்தனம் தான் செய்தான். ''அப்பொழுது ஆபிரகாம் எழுந்திருந்து, ஏத்தின் புத்திரராகிய அத்தேசத்தாருக்கு வந்தனம் செய்து'', (ஆதியாகமம் 23 : 7). விசுவாசிகளின் தகப்பனே வந்தனம் செய்திருக்க, விசுவாசிகளும் அப்படி வந்தனம் செய்ய வேண்டியது மிக அவசியமல்லவா? சிலர் பரிசுத்தவான்களுக்கு ஸ்தோத்திரம் சொல்லலாம் என்கிறார்கள். இதுவும் கொடிய பாவமே. அப்படி, பரிசுத்தவான்களுக்கு ஸ்தோத்திரம் செய்ததாகவும் எந்த ஒரு ஆதாரமுமே கர்த்தருடைய பரிசுத்த வேதாகமத்தில் இல்லை. பெரிய தீர்க்கதரிசியாய்க் காணப்பட்ட சாமுவேலுக்கு ராஜாவாகிய சவுல் வந்தனம் தான் செய்தான். '' இதோ, சாமுவேல் வந்தான்; சவுல் அவனைச் சந்தித்து வந்தனஞ்செய்ய எதிர் கொண்டு போனான்''. (1 சாமுவேல் 13 : 10)

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரட்சகராக இந்த உலகத்தில் இருந்த காலத்தில், சிலர் அவரை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் எண்ணினார்கள். (மாற்கு 8 : 28). இப்படி எண்ணினவர்கள் இயேசுவுக்கு வந்தனம் தான் செய்தார்கள். (மாற்கு 9 : 15). ஆனால், கர்த்தராகிய இயேசுவை தேவன் என்று அறிந்து கொண்டவர்கள், அவருக்கு ஸ்தோத்திரம் தான் செலுத்தினார்கள். (லூக்கா 17 : 11- 16; 19: 37,38)

**சிலர் கூறும் தவறான திருஷ்டாந்தம் :**

கர்த்தருடைய பரிசுத்த வேத சத்தியங்கள் இவ்வாறிருக்க, சிலர் : ''நாங்கள் மனுஷரைப் பார்த்து ஸ்தோத்திரம் என்று சொல்லிக் கும்பிடும்போது, ஸ்தோத்திரம் கர்த்தரிடத்திற்குப் போகும்; கும்பிடுதல் மனுஷரிடத்திற்குப் போகும் என்பதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்''. தாங்கள் ஒரு அலுவலகத்திற்குச் சென்று ஒரு

அலுவலரையோ அல்லது ஒரு நீதிமன்றத்திற்குச் சென்று ஒரு நீதிபதியையோ பார்த்து வணக்கம் என்று சொல்லிக் கும்பிடும்போது, வணக்கம் என்ற வார்த்தையும் கும்பிடுதல் என்ற கைகளைக் கூப்புதலும் ஓரிடத்திற்கும் ஒருவரிடத்திற்கும்செல்லுகிறதோ, வெவ் வேறாக வெவ்வேறிடத்திற்கு வெவ்வேறு நபருக்குப் பிரிந்து செல்லு கிறதோ? ஒரே இடத்திற்கு ஒரே நபருக்கல்லவா அந்த வணக்கம் சொல்லுத லாகிய அந்த வாயினால் சொல்லும் வார்த்தையும், கைகளைக் கூப்பி கும்பிடுதலாகிய அந்தச் செய்கையும் செல்லுகிறது. இதைக்கூட அநேகர் சிந்தியாமலும் உணராமலும் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். மனுஷர்கள் ஒருவருக் கொருவர் பார்த்து ஸ்தோத்திரம் சொல்லிக் கும்பிடுவது, மனுஷரையே ஸ்தோத்திரித்து மனுஷரையே கும்பிடுவதாகும். இது மனுஷரை மகா உன்னதமான தேவனுக்குச் சமமாக்கும் மகா பயங்கர பாவமாகும் என்பதை யாவரும் அறிய வேண்டும்.

**ஆதி சபையார் வாழ்த்து அல்லது வாழ்த்துதல் சொன்னது :**

முதல் நூற்றாண்டு காலத்தில் காணப்பட்ட ஆதிசபையின் ஊழியக்காரர்களும், விசுவாசிகளும், ஒருவருக்கொருவர் ஸ்தோத்திரம் சொல்லவில்லை. ஒருவருக்கொருவர் வாழ்த்து அல்லது வாழ்த்துதல்தான் சொன்னார்கள். வாழ்த்து அல்லது வாழ்த்துதல் என்றால் வந்தனம் சொல்லுதல் அல்லது வணக்கம் சொல்லுதலாகும். ஆங்கிலத்தில் "Salute" என்பதாகும்.

''உங்களை நடத்துகிறவர்களையும், பரிசுத்தவான்கள் யாவரையும் வாழ்த்துங்கள்; இத்தாலியா தேசத்தார் யாவரும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்''. எபிரெயர் 13 : 24, ரோமர் 16:3 முதல் 16 முடிய வாசிக்கும் போது, 'வாழ்த்துங்கள்' என்பதாக 17 இடங்களிலும், ''கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்''

என்பதாக ஓரிடத்திலும், சொல்லப்பட்டிருக்கிறது. ''பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன்'' (1 கொரிந்தியர் 16: 21) ''பரிசுத்தவான்களெல்லாரும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்''. (2 கொரிந்தியர் 13 :13) மேலும், பிலிப்பியர், கொலோசெயர், 1 ம் 2 ம் தெசலோனிக்கேயர், 2 தீமோத்தேயு, தீத்து, பிலேமோன், 1 பேதுரு, 3 யோவான் ஆகிய நிருபங்களில் வாழ்த்து அல்லது வாழ்த்துதல் சொல்லுவதைக் குறித்தும்; 2 யோவான் 9- 11ல் யாருக்கு வாழ்த்துதல் சொல்லக்கூடாது என்பதைக் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது. ''கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள்

வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவ னாகிறான்'' (2 யோவான் 9 -11)

மேலும் '' ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள்'' என்பதாக 1 பேதுரு 5 : 14- ல் சொல்லப் பட்டிருக்கிறது. ''சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்''. (1தெசலோனிக்கேயர்5:26). ''ஒருவரை யொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்'' என்பதாக ரோமர் 16 : 16; 2 கொரிந்தியர் 13 : 12 ஆகியவற்றில் சொல்லப்பட்டிருக்கிறது.

'அன்பு' என்றால் 'தெய்வீக அன்பாகும்' 'முத்தம்' என்றால் 'சிநேகத்தின் அடையாள மாகும்', 'அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள்' என்றால் 'தெய்வீக

அன்பினாலுள்ள பரிசுத்த சிநேகத்தினால் வந்தனம் செய்யுங்கள்' என்பது பொருள். 'பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்' என்றால் 'தெய்வீக பரிசுத்தம் நிறைந்த சிநேகத்தோடு வந்தனம் செய்யுங்கள்' என்பது பொருள். தெய்வீக அன்பிற்கும் தெய்வீக பரிசுத்தத்திற்கும் மாறான, பரிசுத்தமற்ற அன்பும் பரிசுத்தமற்ற சிநேகமும், பரிசுத்தமற்ற வாழ்த்துதல் அல்லது வந்தனம் செய்தலும் தேவகோபத்திற்கும் மகா பயங்கரமான நரக தண்டனைக்கும் ஏற்றதாகும். சிலர் இந்த மகா மகிமையான ஆவிக்குரிய அன்பின் முத்தத்தையும், ஆவிக்குரிய பரிசுத்த முத்தத்தையும், மாம்சத்துக்குரியதாக மாற்றி வைத்திருப்பது மகா ஆபத்துக்குரியதாகும்.

''குமாரன் கோபம் கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ் செய்யுங்கள்; கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற

யாவரும் பாக்கிய வான்கள்''. (சங்கீதம் 2 : 12). தேவனை எங்கு போய்ப் பார்த்து எங்கு வைத்துச் சந்தித்து, எங்கு வைத்து முத்தம் செய்வது? ''தேவனை முத்தம் செய்யுங்கள்'' என்றால் : தேவனை சிநேகியுங்கள், தேவனை நேசியுங்கள், தேவனில் அன்பு கூருங்கள், தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவருக்குப் பிரியமான பிள்ளைகளாய் நடவுங்கள்'' என்பது பொருள் (1 யோவான் 5 :2,3)

**ஸ்தோத்திரம் குறித்து ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபைக்கு கர்த்தரின் வெளிப்படுத்தல்:**

''ஸ்தோத்திரம் மனுஷனுக்குரியதல்ல, அது தேவனுக்குரியது'' என்பதாக எங்களது ஆத்மீகத் தந்தையாய்க் காணப்பட்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்த **சாது. G. தேவநேசன் ஐயா** அவர்களுக்குக் கர்த்தர் தெளிவாக வெளிப்படுத்தி அறிவித்திருந்தார். கர்த்தருடைய சத்திய வேதமும், அந்த வெளிப்படுத்தலுக்குச் சரியான ஆதாரமாகவே இருக்கிறது.

எனவே நாங்கள் மனுஷரைப் பார்த்து ஸ்தோத்திரம் சொல்லுகிறதில்லை. மனுஷரைப் பார்த்து வாழ்த்து அல்லது வந்தனம் தான் சொல்லுகிறோம். மேலும், நாங்கள் கர்த்தரை அதிகமாக ஸ்தோத்திரித்துத் துதித்து மகிமைப்படுத்துகிறோம்; புகழ்த்துகிறோம்; உயர்த்துகிறோம்; அவருக்கு துதிகனம் மகிமையைச் செலுத்துகிறோம்; ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்துமிருக்கிறோம். (கொலோசெயர் 4 :2). அல்லேலூயா. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

எனவே ஸ்தோத்திர பலியைக் குறித்ததான கர்த்தருடைய வேத சத்தியத்தைக் குறித்துத் தெளிவாக அறிந்து அதன்படி யாவரும் செய்வதோடு, யாவரும் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு பரிசுத்தமடைந்து பரிசுத்த ஆவியையும் பெற்று, ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் உறுதியாய்த் தரித்து விழிப்புடன் காணப்பட்டு, ஸ்தோத்திரத்தினால் தேவனுடைய கிருபையில் அளவில்லாமல் பெருகி (2 கொரிந்தியர் 4 : 15), அளவில்லாத

தேவ ஆசீர்வாதங்களைக் கர்த்தரால் அடைந்து கொள்ளுங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென்.

Sadhu. C. SELVARAJ (AIYA)
Beginning Pentecostal Truth Church
MALAVILAI PRAYER HOUSE
POST BAG NO: 3
KULASEKHARAM - 629 161
KANNIYAKUMARI DISTRICT
TAMILNADU, INDIA

**சாது. C. செல்வ ராஜ்**
பொறுப்பாளர் & நிர்வாகி,
ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை,
மலவிளை ஜெபவீடு, செருப்பாலூர் அஞ்சல்,
குலசேகரம் (வழி)
கன்னியாகுமரி மாவட்டம்,
தமிழ்நாடு, தென் இந்தியா. பின். : 629 161.
தொலைபேசி : 04651 277450

பிரின்ட் பாயின்ட் ஆப்செட், நாகர்கோவில்.